வீதம், அறநிலையத் துறையின்மூலமாக ஒதுக்கீடு செய்யப்படுவதாக மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டிருந்தது. அதுபோல, சென்ற ஆண்டு, 2007–2008 ஆம் ஆண்டில், எத்தனை கோயில்களுக்கு அந்த 25 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டது என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் ஆதி திராவிடர்கள் வசிக்கக்கூடிய பகுதிகள் என்று இதுவரை 14 ஆயிரம் திருக்கோயில்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் திட்டத்தின்மூலமாக தமிழ்நாடு அரசு அந்தப் பணியைச் செய்திருக்கின்றது. இந்த ஆண்டு ஆயிரம் திருக்கோயில்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் திட்டத்தின்கீழ் நிதியொதுக்குவதற்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு இரண்டாயிரம் திருக்கோயில்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை சம்பந்தப்பட்ட திருக்கோயில்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 178, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

178—

தரம் உயர்த்துதல்

***26796—திரு. கு. சின்னதுரை:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதி, சித்தேரி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தலைவாசல் தொகுதி, சித்தேரியிலிருக்கும் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக் கோரி கருத்துருக்கள் ஏதும் பெறப்படவில்லை. கருத்துருக்கள் பெறப்பட்டால், விதிமுறைகளின்படி பரிசீலிக்கப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

2008 ஏப்ரல் 29]

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை.

திரு. கு. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தலைவாசல் தொகுதியில் சித்தேரி ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளியில் மொத்தம் 278 மாணவர்கள் படிக்கிறார்கள். அதிலே அரசு உயர்நிலைப் பள்ளிக்காக 4.78 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிலம் ஒதுக்கப்பட்டாலும், அந்தப் பகுதியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஆதி திராவிட மக்கள் வசிக்கிற காரணத்தால், அரசுக்குத் செலுத்த வேண்டிய தொகையை அவர்களால் செலுத்த முடியாத ஒரு சூழ்நிலை உள்ளது. அதனால் அங்கே புரவலர் திட்டத்தில் 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி இருக்கிறது. அதைப் பயன்படுத்தியோ அல்லது S.S.A. திட்டத்தின்மூலமாக அரசே அந்த நிதியைக் கட்டி இந்த ஆண்டே அந்தப் பள்ளியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தரம் உயர்த்தித் தருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிட்டதைப் போல அந்தப் பள்ளியிலே 278 மாணவர்கள் படித்துக் கொண்டிருந்தாலும்கூட, எட்டாம் வகுப்பிலே ஏறத்தாழ 38 மாணவர்கள் படித்துக் கொண்டிருப்பதாக எனக்கு விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. அங்கே பொது மக்களுடைய பங்குத் தொகை இன்னும் செலுத்தப்படவில்லை. உறுப்பினர் அதற்கான காரணத்தை இங்கே தெரிவித்திருக்கிறார். S.S.A. திட்டத்தின்கீழே இதை எடுத்துக்கொள்ள முடியாது. காரணம், S.S.A. திட்டம் என்பது, துவக்க நிலை மற்றும் நடுநிலையிலே இருக்கக்கூடிய பள்ளிகளுக்காக மாத்திரம் செயல்படுத்தக்கூடிய திட்டமாகும். எனவே, இந்தப் பங்குத் தொகை செலுத்தப்பட்டால், அரசு உடனடியாகப் பரிசீலிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அல்லது, SUCCESS திட்டத்தில் வரக்கூடிய ஆண்டுகளிலே அரசு நிச்சயமாகப் பரிசீலிக்க வாய்ப்பு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை.

திரு. கு. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மேலும் எனது தொகுதியில் இந்த ஆண்டு சதாசிவபுரம் அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு 13–3–2008 அன்று ஒரு இலட்சம் ரூபாய் பொதுமக்களால் செலுத்தப்பட்டிருக்கிறது. அதேபோல், கிழக்கு ராஜாபாளையம் அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு 19–2–2008 அன்று ஒரு இலட்சம் ரூபாய் பொதுமக்களால் செலுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு இந்தப் பள்ளியையாவது தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக கேட்டுக்கொண்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய முன்மொழிவுகள் அரசுக்குக் கிடைக்கப்படும் என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் கோரியிருக்கக்கூடிய பள்ளிகளைத் தரம் உயர்த்துவதற்கு அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 179, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

179—

சரணாலயம்

***34821—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதியில் தேவனாம்பட்டு மான்கள் சரணாலயம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடை, (அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கம் தொகுதி, தேவனாம்பட்டில் மான்கள் சரணாலயம் அமைப்பது அரசின் பரிசீலனையில் இல்லை.